தம்பலகமம் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 25 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2019 மே 16 ஆம், 2019 மே 31 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் தம்பலகமம் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

| கணக்கு விடயம் | பெறுமதி ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்று | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| நிலையான சொத்து | 54,428,824 | நிலையான சொத்துப் பதிவேடு | நிலையான சொத்துக்களுக்கான பதிவேடு இறுதி கணக்குகளைத் தயாரிப்பதற்கான விடயத்தை மட்டும் உள்ளடக்கிய பதிவேடு அல்ல என்பதுடன் சொத்துக்களின் முழுமையான விபரங்கள் உள்ளடக்கிய பதிவேடாக பேணப்படல் வேண்டும். | நிலையான சொத்துக்களுக்கான பதிவேடு இறுதி கணக்குகளைத் தயாரிப்பதற்கு ஏற்ற வகையான கணக்கீட்டுத் தொகையினை மட்டும் கொண்ட பதிவேடே காணப்படுகின்றது. வாகனம் தவிர்ந்த ஏனைய அனைத்து சொத்துக்களுக்கும் விலை மதிப்பீட்டுக்குழுவினை நியமித்து அவர்களின் ஊடாக மீள் விலை மதிப்பீடு செய்வதிலே தாமதம் ஏற்பட்டுள்ளது. |

1.4 இணங்காமைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| அ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் IX இன் பிரிவு 180 | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப் பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய பாதுகாப்பு பிணைப் பணத்தின் அளவு தீர்மாணிக்கப்படாததால் பிணைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை. | பிணைகளின் அளவுகள் தீர்மானிக்கப்பட்டு அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிணைப் பணத்தினை செலுத்தி குறித்த கடமையாற்றுவதற்கு உத்தியோகத்தர்கள் முன்வராமையினால், இதற்கமைவாக பிணைப்பணத்தின் அளவு தீர்மானிக்கப்பட வில்லை என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| ஆ) மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம் பிரிவு 203 | ஆண்டு தோறும் சகல வாகனங்களுக்கும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்படுதல் வேண்டும். எனினும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 06 வாகனங்களுக்கு மீளாய்வாண்டில் வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | 06 வாகனங்களுக்கும் வருமாக உத்தரவுப் பத்திரத்தினைப் பெற்று அது தொடர்பாக அறியத்தரவும். | வாகன உத்தரவு பத்திரம் பெறப்படாத அனைத்து வாகனங்களுக்கும் உடனடியாக உத்தரவு பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா. 745,678 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 2,719,558 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2018 பாதீடு | 2018 ஆண்டுக்கான வருமானம் | 2018 பெறப்பட்ட வருமானம் | 2018.12.31 இல் நிலுவை | 2017 பாதீடு | 2017 ஆண்டுக்கான வருமானம் | 2017 பெறப்பட்ட வருமானம் | 2017.12.31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வாடகை | 11,050 | 6,477 | 6,344 | 132 | 11,019 | 6,502 | 6,348 | 153 |
| அனுமதி பத்திர கட்டணம் | 1,463 | 913 | 905 | 8 | 1,250 | 1,024 | 1,024 | - |
| ஏனையவை | 4,501 | 3,600 | 3,058 | 543 | 2,321 | 2,141 | 1,906 | 235 |

மீளாய்வாண்டில் வாடகை நிலுவை கடந்த வருடத்தை விட ரூபா 21,000 தொகையால் ஆல் குறைவடைந்தள்ளது. மேலும் அனுமதிப் பத்திர கட்டணம் மற்றும் ஏனைய நிலுவைகள் முறையே ரூபா 8,000 மற்றும் ரூபா 308,000 தொகையால் அதிகரித்துள்ளமை அவ்வருமானங்களின் அறவீடு மந்தகதியில் நடைபெற்றுள்ளது என்பதை காட்டுகிறது.

### 2.2.2 வீதவரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவிற்கு அமைய பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றிற்கான ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | ஆதனங்களுக்கான ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சபைத் தீர்மானத்திற்கு அமைய சோலை வரி அறவிடப்படும் இடங்கள் தெரிவு செய்யப்பட்டு உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலக குழாத்தினரின் ஆலோசனைக்கு அமைய விலை மதிப்பீட்டு திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு வரி மதிப்பீடு செய்யப்பட்டு சோலை வரி அறவிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்க்கொள்ளப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

### 2.2.3 வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் எல்லைக்குள் காணப்படும் இறைச்சிக்கடைகளின் குத்தகை வருமான நிலுவை மீளாய்வாண்டு வரை ரூபா 228,790 தொகையாக காணப்பட்ட போதிலும் இவ் நிலுவைத் தொகையை கணக்காய்வுத் திகதியான 2019 மே 15 ஆம் திகதிவரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவைகளை அறவீடு செய்வதுடன் எதிர்வரும் காலங்களில் வாடகை நிலுவை ஏற்படாத வகையில் அறவீடு செய்யப்படல் வேண்டும். | 2018, 2019ம் ஆண்டுகளில் கால்நடைகளுக்கு ஏற்பட்ட நோய் காரணமாக இறைச்சிக் கடைகளின் செயற்பாடுகள் மந்தகதியில் காணப்பட்டது தற்போது இந்நிலை மாறி இறைச்சிக்கடைகளின் செயற்பாடுகள் சற்று முன்னேற்றம் அடைந்து வருவதனால் குறித்த இறைச்சிக்கடைகளின் நிலுவைகளை அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| | | உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தங்களுக்குஅறியத்தருகின்றேன். |

2.2.4 முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டுக்கான முத்திரைக் கட்டணத்தை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2017ம் ஆண்டுக்கான முத்திரைக் கட்டணம் 2019ம் ஆண்டு மார்ச் மாதம் முழுமையாக பெறப்பட்டுள்ளது அதே போன்று 2018ம் ஆண்டுக்கான முத்திரைக் கட்டணத்தையும் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பபட்டு வருகின்றது என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாடு சேவைகள்மற்றும் பொது வழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் அதன் எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகள் பாலம்போட்ட ஆறு பிரதேசத்தின் காட்டுப்பகுதியில் கொட்டப்பட்டு வருகின்றமையால் அங்குள்ள யானைகள் இக்கழிவுகளை உண்பதால் அந்த யானைகளுக்கு உயிர் ஆபத்துக்களை ஏற்படுத்துவதற்கு சந்தர்ப்பமாக அமைகின்றது. | திண்மக்கழிவுகளைக் கொட்டுவதற்கு உரிய அனுமதிகளைப் பெற்று வன விலங்குகளுக்கு ஆபத்துக்கள் ஏற்படாத வகையில் செயற்படுதல் வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகளைக் கொட்டுவதற்கு தங்களால் பெறப்பட்ட தற்காலிக அனுமதிப்பத்திரத்தினை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | சபையின் எல்லைக்குள் சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் பாலம் போட்டாறு சிங்ககந்த எனும் இடத்தில் கொட்டப்பட்டு வருகின்றன இக்குப்பைகளின் தாக்கத்தில் இருந்து சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் பிரதேச சபையினால் மாதாந்தம் ஒரு தடவை JCB இயந்திரத்தின் மூலம் அமத்தி சீராக்கப்படுவதுடன், கிரவலினால் மட்டப்படுத்தப்பட்டு வருகின்றன. |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குச் சட்டத்தின் பிரகாரம் அதன் நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றை சபையினால் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. மேலும் 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக பொருத்தமான அறிவினை கொண்டிருக்கவில்லை. | தங்களால் அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் நிகழ்ச்சி நிரலை கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதுடன் அதன் முன்னேற்ற அறிக்கையினையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பிரதேச சபையின் கீழ் வருகின்ற நிலைபேறான அபிவிருத்தியின் ஒரு இலக்கான சுற்றாடல் சூழலை பாதுகாத்தல் எனும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன குறிப்பாக முறையான திண்மக்கழிவகற்றல், மரங்கள் நடும் திட்டம், கண்டல் தாவரங்களைப் பாதுகாக்கும் திட்டம்,என்பன மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இது தொடர்பாக இப்பிரதேசத்தின் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) உள்ளூராட்சி கடன் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து 2012 ஆம் ஆண்டில் அலுவலக கட்டிட நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 11,949,925 கடன் தொகையை இன்றுவரை கொடுத்துத் தீர்க்க சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இக்கடன் தொகையை குறித்த காலப்பகுதியில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அலுவலக கட்டடத்திற்கான உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதிய கடன் செலுத்தும் முறையானது கடந்த வருடம் மீள் பட்டியல் இடப்பட்டு அதற்கேற்ப 2018ம் ஆண்டு நவம்பர் மாதத்திலியருந்து முறையாக செலுத்தப்பட்டு வருகின்றது என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |
| (ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த 09 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் 2015 ஆம் ஆண்டு காணாமல் போயிருந்ததுடன் அதன் மூலம் பெறப்பட்ட பணம் பற்றுச்சீட்டுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் சபையில் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகியும் இவ்விடயம் தொடர்பாக மாகாண | ஒழுக்காற்று விசாரனையின் பிரகாரம் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக அறியத்தரவும். | தாபன விதிக்கோவை அத்தியாயம் XLVIII க்கு அமைய இது தொடர்பிலான முறைசார் ஒழுக்காற்று விசாரனை நிறைவு பெற்றுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| நிதி ஒழுங்கு விதி 71.3 இன் பிரகாரம் குறித்த ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் பற்றுச்சீட்டுப் புத்தகங்களின் மூலம் ஏற்பட்ட இழப்பை கணிப்பீடு செய்து அவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கும் சபை தவறிவிட்டது. | | |
| (இ) பொதுநிர்வாக அமைச்சின் 09/2009(1) ஆம் இலக்க 2009 யூன் 17 ஆம் திகதிய சுற்றறிக்கையின் (ii) ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத் தலைவர் உட்பட அரச அலுவலகர்கள் அனைவரும் தமது சேவை நிலையங்களுக்குள் உள்வருகை மற்றும் வெளிச்செல்கையினையும் விரல் அடையாள பதிவு இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென கூறப்பட்ட போதிலும் சபையின் செயலாளர் அவ்வாறு செய்யத்தவறியிருந்தார். | சுற்றறிக்கை கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டும் என்பதுடன் சபையின் செயலாளர் வெளிக்கள உத்தியோகத்தர் என்பதனை உறுதிப்படுத்தவும். | சபை செயலாளரும் ஒரு வெளிக்கள உத்தியோகத்தராக அமைவதனால் தொடர்புபட்ட அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மாவட்ட செயலாளர் போன்றவர்களின் அழைப்பின் பேரில் வீட்டில் இருந்துநேரடியாக கூட்டங்களுக்கு செல்ல வேண்டியுள்ளதனாலும், பொது மக்களின் நலன் கருதி அலுவலகத்திற்கு வருவதற்கு முன் நேரடியாக சில களப்பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளமையினால் அத்தினங்களில் மாத்திரம் விரல் அடையாளம் பதிய முடியாதிருந்தது என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றேன். |
| (உ) சபையிலிருந்து சேவையை விட்டு விலகிய ஊழியரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,500 தொகையான கடன் நிலுவையை அவர்களிடம் அல்லது அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகை அறவீடு செய்யப்படல் வேண்டும். | சபையிலிருந்து சேவையை விட்டு விலகிய ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகையினை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

3.3 சொத்து முகாமைத்துவம்

3.3.1 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) சபையில் காணப்படும் 02 மோட்டார் சைக்கிள்கள், இரண்டு சக்கர உழவு இயந்திரம், நான்கு சக்கர | திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய வாகனங்களைப் பயன்படுத்துவதுடன் | தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட வாகனங்களில் திருத்தக் கூடிய வாகனங்களை திருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | |
|---|---|---|
| உழவு இயந்திரம் ஆகியவற்றை திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாது 04 வருட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றது. | திருத்தம் செய்யக்கூடிய நிலையில் இல்லாத வாகனங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். | என்பதை அறியத்தருகின்றேன். |
| (ii) மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மாணியத்தின் கீழ் ரூபா 918,057 பெறுமதியில் திண்மக் கழிவுகள் பிரித்தெடுக்கும் நிலையம் நிர்மாணிக்கப்பட்டு ஒப்பந்தகாரரால் 2018 திசெம்பர் 12 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2019 மே 15 ஆம் திகதி வரை பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது. | பயன்படுத்தப்படாத இக்கட்டிடத்தினைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திண்மக் கழிவுகளை பிரித்தெடுத்து திண்மக்கழிவு முகாமைத்துவத்தை திறன்பட மேற்கொள்வதற்கு குறித்த கட்டடம் விரைவாக பாவனைக்குட்படுத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

3.3.2 வருடாந்த இருப்புக் கணிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் இருப்புக் கணக்கெடுப்பின் போது சபையினால் பராமரிக்கப்படும் 03 நூலகங்களில் 667 புத்தகங்கள் கணக்கெடுப்பு சபைக்கு சமர்ப்பிக்கப்படாமை தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அவை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நூலகப் புத்தகங்களில் குறைவு ஏற்படாத வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை உருவாக்குதல் வேண்டும். | புத்தங்களை இரவல் எடுத்த வாசகர்களினால் பெறப்பட்டு மீள வழங்கப்படாத புத்தகங்களை உடன் ஒப்படைக்குமாறு பதிவுத்தபாளில் உரிய நபர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது ஏனைய புத்தகங்களுக்கு அதனுடன் தொடர்புடைய நபர்களிடமிருந்து புத்தகத்தை அல்லது அதற்கு சமமான பெறுமதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

3.3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச்சட்டத்தின் பிரகாரம் ஊழியர்களுக்கான நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்புப் பணம் குறித்த மாதத்தின் இறுதித் | தண்டப்பணங்கள் சபை நிதியிலிருந்து செலுத்த முடியாது. எனவே இதற்கான சந்தர்ப்பத்தினை ஆராய்ந்து பொறுப்பானவர்களிடமிருந்து | 2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியில் பதிலீட்டு தொழிலாளர்களாக கடமையாற்றியவர்களுக்கு வேதனக்கொடுப்பனவிற்கேற்ற வகையில் சபையில் நிதி |

| | | |
|---|---|---|
| திகதிக்கு முன்னர் நிதியத்துக்குச் செலுத்தல் வேண்டும். எனினும் சபையில் 2012 சனவரி தொடக்கம் 2016 ஏப்ரல் வரை கடமை புரிந்த ஊழியர்களுக்கான ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்புப் பணத்தை அதற்குப் பொறுப்பான ஊழியர்கள் செலுத்த தவறியதனால் சபை ரூபா 52,673 தொகையை தண்டப்பணமாக செலுத்தியிருந்தது. | அறவிடப்படல் வேண்டும். | வசதியின்மையினால் ஊமியர் நம்பிக்கை நிதியத்திற்கு தண்டப்பணம் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது ஆனால் தற்போது உடனுக்குடன் பதிலீட்டு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றேன் |

3.4 பெறுகை

3.4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 128 ஆம் இலக்க 2006 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இச்சுற்றுநிருபத்திற்கு இணங்க பெறுகைத்திட்டம் ஆண்டுதோறும் தயாரிக்கப்படல் வேண்டும். | 2019ம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்படும் விடயங்களுக்கு பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

.4.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சந்தைக் கட்டடம் நிர்மாணித்தல்<br>மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் ரூபா 10,743,042 தொகையான ஒப்பந்தமப் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சந்தைக் கட்டிடம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br>i) இவ்வேலை 2018 சனவரி 22 ஆம் திகதி ஒப்பந்தக்காரரால் நிறைவு செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் ஒப்பந்தக்காரர் நிர்மாண வேலைகளை கணக்காய்வுத் | கொடுப்பனவுச் சிட்டையை உறுதிப்படுத்தும் போது செய்யப்படாத வேலைகள் காணப்படின் அவற்றை உறுதிப்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளை உறுதிப்படுத்துபவரே பொறுப்பேற்க வேண்டும் என்பதுடன் | இது தொடர்பாக தொழில் நுட்ப உத்தியோகத்தரிடம் விளக்கம் கோரப்பட்ட போது குறித்த வேலைக்கான கொடுப்பனவுச் சிட்டை ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டதனால் காலதாமத்திற்கான கட்டணம் அறவிட முடியாமல் போய்யுள்ளது எனத் தெரிவித்துள்ளார் மேலும் பத்து மில்லியன் தொகைக்கு மேற்பட்ட வேலைத்திட்டங்களை உள்ளூராட்சி திணைக்களமே மேற்கொள்வதனால் அவர்களினாலும் குறித்த தாமத கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வில்லை இருப்பினும் குறித்த வேலைக்கான பிடி காசு இது |

| | | |
|---|---|---|
| திகதியான 2019 மே 15 ஆம் திகதி வரை நிறைவு செய்யாதிருந்த போதிலும் ஒப்பந்தகாரர் தொடர்பாக மேலதிக நடவடிக்கை எதனையும் எடுத்திருக்காததுடன் ரூபா 537,152 தொகையான தாமதக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | முடிவுறுத்தப்படாத வேலைகளை கொடுப்பனவுச் சிட்டையிலிருந்து அகற்ற வேண்டும். மேலும் தாமதக் கட்டணம் தொடர்பாக ஆராய்ந்து அதனை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கவும். | வரை வழங்கப்படாததனால் பிடிகாசிலிருந்து குறித்த தண்டப்பணத்தினை அறவிடுவதற்கு உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு எம்மால் தெரியப்படுத்தப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| ii) $81.52m^3$ சீலிங், தரைக்கு பதிக்கப்பட்ட மாபிள்கள், ஸ்கேட்டின் (Skirten) ஆகியன ஒழுங்கான முறையில் பொருத்தப்பட்டிருக்காமலும் மற்றும் சிவர்பூச்சுக்கள் வெடித்தும் காணப்பட்ட போதிலும் இவற்றைக் கருத்தில் கொள்ளாது கொடுப்பனவு வழங்குவதற்கு தொழில் நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை பெறப்படாது சபையின் தவிசாளரால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. | நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களில் காணப்படும் குறைபாடுகளை திருத்தம் செய்வதுடன், கொடுப்பனவு சிபாரி மேற்கொள்ளும் போது பொறுப்பான உத்தியோகத்தருடன் கலந்தாலோசிக்க வேண்டும். | குறித்த சந்தைக் கட்டடத்தில் தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட வேலைகளுக்கான கொடுப்பனவு சிட்டையில் தொழில் நுட்ப உத்தியோகத்தரினால் சிபார்சு செய்யப்பட்டதற்கு அமைவாகவே தவிசாளரினால் குறித்த ஒப்பந்தகாரர் கேட்டுக்கொண்டதற்கமைய உள்ளூராட்சி ஆணையாளருக்கு சிபார்சுக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன |